# TVEC

# செய்தி

ISSN 2012 - 5054

2024 ஜூன்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

## உள்ளே

தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் (TVET) துறைக்கான வாழ்தொழில் வழிகாட்டுதலின் புதிய போக்குகள்

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் விமான பராமரிப்பு தொழில்நுட்ப பாடநெறிகளுக்கு TVEC அங்கீகாரம்

தானியங்கு சான்றிதழ் சரிபார்ப்பு முறைமை

NVQ முறைமையின் கீழ் திறன்கள் மற்றும் அனுபவத்திற்கு திறன்கள் அனுமதிப்பத்திரங்கள்

Skills Pasport விண்ணப்ப செயல்முறை

முந்தைய கற்றல் அங்கீகரிப்பு (RPL) முறையினூடாக NVQ சான்றிதழ்களை வழங்குவதற்கான வாய்ப்பு மேலும் விரிவாக்கம்

நீங்களும் கணிப்பீட்டாளர் ஆகலாம்

2024 ஜூன மாதம் 15 ஆம் திகதி வரையில் விநியோகிக்கப்பட்டுள்ள NVQ சான்றிதழ்களின் எண்ணிக்கை 799673 ஆகும்.

# தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் (TVET) துறைக்கான வாழ்தொழில் வழிகாட்டுதலின் புதிய போக்குகள்

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி சட்டம் மற்றும் 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் மூலம், TVET துறைக்கான வாழ்தொழி வழிகாட்டுதல் ஒழுங்குமுறை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு (TVEC) வழங்கப்பட்டுள்ளது. TVEC இன் தொழில்துறை உறவுகள் பிரிவு வாழ்தொழில் வழிகாட்டல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, இலங்கையில் வாழ்தொழில் வழிகாட்டல்களை வழங்கும் அனைத்து அரசாங்க நிறுவனங்களின் உறுப்பினர்களைக் கொண்ட தேசிய வாழ்தொழில் வழிகாட்டல் ஒழுங்குமுறைக் குழு, TVET துறையில் வழிகாட்டுதலை ஒழுங்குபடுத்துவதற்கும் தரப்படுத்துவதற்கும் 2017 இல் உருவாக்கப்பட்டது.

தேசிய வாழ்தொழில் வழிகாட்டல் ஒழுங்குமுறைக் குழுவின் தீர்மானங்களின்படி, இலங்கையில் உயர் தரத்துடன் வாழ்தொழில் வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவதற்கும் தரப்படுத்துவதற்கும் பின்வரும் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

### 01. தகுதியான வாழ்தொழில் வழிகாட்டல் அலுவலர்களை அடையாளம் கண்டு பதிவு செய்தல்.

ஏப்ரல் 2024 நிலவரப்படி 343 பதிவுசெய்யப்பட்ட வாழ்தொழில் வழிகாட்டுதல் பயிற்சியாளர்கள் உள்ளனர், மேலும் இந்தத் தகவலை TVEC இன் வலைப்பக்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வாழ்தொழில் வழிகாட்டி பயிற்சியாளர்களின் பட்டியலைப் பார்வையிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.



### 02. அடையாளம் காணப்பட்ட வாழ்தொழில் வழிகாட்டல் அலுவலர்களுக்கு திறன் அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துதல்.

நாடளாவிய ரீதியில் உள்ள 25 மாவட்டங்களில் நான்கு (04) மேலதிக நிகழ்ச்சிகளுடன் மொத்தம் 29 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

### 03. வாழ்தொழில் வழிகாட்டல் நெறிமுறைக் கோட்பாட்டை தயாரித்தல்

வாழ்தொழில் வழிகாட்டல் பயிற்சியாளர்களுக்கான நெறிமுறைக் கோட்பாடு 14 செப்டம்பர் 2023 அன்று அறிமுகப்படுத்தப்பட்டதுடன், வாழ்தொழில் வழிகாட்டல் பயிற்சியாளர்களுக்கான நெறிமுறைகள் அடங்கிய சிறுநூலின் மென் நகல் பிரதியை TVEC இணையதளத்தினூடாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

### 04. வாழ்தொழில் வழிகாட்டுதல் பயிற்சியாளர்களுக்கான தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 04 இன் தேசிய தேர்ச்சித் தரத்தை தயாரித்தல்.

வாழ்தொழில் வழிகாட்டல் பயிற்சியாளர் என பெயரிடப்பட்ட தேசிய தேர்ச்சித் தரமானது தேசிய தொழிற்திறன் தகுதி நிலை 04 சான்றிதழ் விருதளிப்பதற்காக தயாரிக்கப்பட்டது. இத்தரம் 11 தேர்ச்சி அலகுகளைக் கொண்டுள்ளதுடன் இதற்கான அங்கீகாரம் 2021.10.05 அன்று TVEC ஆளுநர் சபையால் வழங்கப்பட்டது.

### 05. தகுதிவாய்ந்த வாழ்தொழில் வழிகாட்டல் அலுவலர்களுக்கு முந்தைய கற்றல் அங்கீகரிப்பு (சீடு) அடிப்படையிலான கணிப்பீட்டு முறை மூலம் தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 04 சான்றிதழை விருதளித்தல்

முந்தைய கற்றல் அங்கீகரிப்பு (RPL) கணிப்பீட்டு முறையின் மூலம் தற்போது வாழ்தொழில் வழிகாட்டல் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு இது தொடர்பான செயலமர்வு நடாத்தப்பட்டதுடன் விண்ணப்பித்த 11 பேர்

தேசிய தொழில்முறை தகுதிச் சான்றிதழுக்கான கோட்பாட்டு அறிவுசார் கணிப்பீட்டுப் பரீட்சைக்கு தோற்றி இறுதிக் கணிப்பீட்டை வெற்றிகரமாக பூர்த்திசெய்து தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 04 சான்றிதழையும் பெற்றுக்கொண்டனர்.

### 06. வாழ்தொழில் வழிகாட்டலுக்கான தேசிய தொழிற்திறன் தகுதியின் 05 ஆம் மட்டத்தில் தேசிய தேர்ச்சித் தரத்தைத் தயாரித்தல்

2024 ஆம் ஆண்டில், வாழ்தொழில் வழிகாட்டல் மற்றும் அபிவிருத்தி என தேசிய தேர்ச்சித் தரம் டிப்ளோமா மட்டத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

### 07. வாழ்தொழில் வழிகாட்டலில் ஈடுபடும் அலுவலர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

எட்டு (08) மாகாணங்களில் சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் உதவியுடன் எட்டு (08) நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### 08. தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 05 பாடநெறிகளில் பின்பற்றுகின்ற மாணவர்களுக்கான வாழ்தொழில் வழிகாட்டல் நடவடிக்கைகளுக்காக நான்கு (04) தொழிற்துறை திறன்கள் சபைகளின் துறைகளுக்கான ஒழுங்குமுறை திட்டமாக கொரிய அரசாங்கத்தின் உதவியுடன் இணைய தகவல் அமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

2023 இல் திட்டமிடப்பட்ட இந்த தொழில்முறை வழிகாட்டிக்கான நிகழ்நிலை (ஆன்லைன்) அமைப்பின் உருவாக்கம் 2026 இல் முடிவடையும் நோக்கத்துடன் அலுவல்கள் மேற்கொள்ளப்படுகிறது.

### 09. வாழ்தொழில் வழிகாட்டல் நிலையங்களைப் பதிவு செய்தல் மற்றும் பதிவுசெய்யப்பட்ட நிலையங்களின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தல்

இலங்கையில் வாழ்தொழில் வழிகாட்டலை உயர் தரத்துடன் நடைமுறைப்படுத்துவதற்காகவும், தரப்படுத்தலுக்காக எடுக்கப்பட்ட முடிவுகளின் படியும், ஒழுங்குபடுத்தும் பணியின் செயல்பாடாகவும், வழிகாட்டல் நிலையங்களிலிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களின்படி, தேசிய தொழில் வழிகாட்டல் ஒழுங்குமுறைக் குழுவின் உறுப்பினர்கள் முறைப்படி வழிகாட்டல் நிலையங்களை மதிப்பீடு செய்தனர். ஏப்ரல் 2024 வரையில் அவ்வாறான பத்து (10) நிலையங்களைப் பதிவு செய்ய ஆணைக்குழு அங்கீகாரமளித்துள்ளது.

இலங்கையில் முதன்முறையாக வாழ்தொழில் வழிகாட்டலுக்கான தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழ்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பத்து (10) வாழ்தொழில் வழிகாட்டல் நிலையங்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் ஏப்ரல் 25, 2024 அன்று திறன்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.





**W.B விஜேசிங்க** - உதவி பணிப்பாளர்
தொழிற்துறைசார் உறவுகள் பிரிவு

## ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் விமான பராமரிப்பு தொழில்நுட்ப பாடநெறிகளுக்கு TVEC அங்கீகாரம்




இலங்கையில் தொழிற்கல்வி தரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கிய மைல்கல்லாக, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) உத்தியோகபூர்வமாக ஸ்ரீலங்கன் தொழில்நுட்ப பயிற்சியுடன் (STT) பெப்ரவரி 14, 2024 அன்று ஒரு பிரகடனத்தில் கையெழுத்திட்டது.

இக் குறிப்பிடத்தக்க உடன்படிக்கையானது, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் ஸ்ரீலங்கன் தொழில்நுட்பப் பயிற்சியுடன் தரம் வாய்ந்த உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிகளை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பங்காளித்துவத்தை உறுதிப்படுத்துகிறது.

இந்நிகழ்வில் TVEC மற்றும் STT இன் முக்கிய பிரதிநிதிகள் கலந்துகொண்ட பிரகடன கையொப்பமிடும் வைபவம் இலங்கை மாணவர்களிடையே தொழில்சார் திறன்கள் மற்றும் நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்கான பரஸ்பர அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியது. பிரகடனத்தின் விதிமுறைகளின் கீழ், TVEC ஆல் வகுக்கப்பட்ட குறிப்பிட்ட நிபந்தனைகளை கடைபிடிப்பதற்கான பொறுப்பை STT ஏற்றுக்கொண்டுள்ளது. அங்கீகாரம் பெற்ற படிப்புகள் மற்றும் திட்டங்களை வழங்குவதை உறுதி செய்வதற்காக தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) கட்டமைப்பு மற்றும் பிற தொடர்புடைய வழிகாட்டுதல்களுடன் சீரமைப்பது இதில் அடங்கும்.

நாடு முழுவதும் தொழிற்கல்வியில் சிறந்து விளங்குவதில் இத்தகைய கூட்டாண்மைகளின் முக்கியத்துவத்தை இவ் வைபவத்தில் உரையாற்றிய TVEC இன் பணிப்பாளர் நாயகம் வலியுறுத்தினார். விமானப் போக்குவரத்து மற்றும் தொடர்புடைய துறைகளில் உயர்தரப் பயிற்சித் திட்டங்களை வழங்குவதில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவுடன், துறையில் முக்கியப் பங்கு வகிக்கும் STTயின் பங்கை பணிப்பாளர் (NVQ) எடுத்துரைத்தார். அதேபோன்று, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பிரதிப் பொது முகாமையாளர், இந்த ஒத்துழைப்பில் நம்பிக்கையை வெளிப்படுத்தியதுடன் இது விமானப் போக்குவரத்து துறையில் ஆர்வமுள்ள நிபுணர்களுக்கு தொழில் தொடர்பான பயிற்சி மற்றும் சான்றிதழ்களை வழங்குவதற்கான STT இன் உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்தும் என்று கூறினார். இக்கூட்டாண்மை ஏற்பாடு STT இன் தற்போதைய ஒருங்கிணைப்புக்கு மதிப்பைச் சேர்ப்பதுடன் உலகம் முழுவதும் அதிகளவான இயக்கத்தையும் ஏற்படுத்தும்.



கலாநிதி தில்ருக்ஷி ஹேரத்
பிரதிப் பணிப்பாளர் (NVQ)

## தானியங்கு சான்றிதழ் சரிபார்ப்பு முறைமை (Automated Certificate Verification System)

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு நிகழ்நிலை (Online) முறை மூலம் NVQ இற்குச் சமமான சான்றிதழ்களை தானாகவே சரிபார்ப்பதற்காக தானியங்கு சான்றிதழ் சரிபார்ப்பு முறைமையை (Automated Certificate Verification System – ACVS) அறிமுகப்படுத்தியுள்ளது. இம் முறைமை NVQ சான்றிதழ்களுக்கான சரிபார்ப்பு செயல்முறையை நெறிப்படுத்தவும், உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் ஏனு முறைமையின் நம்பகத்தன்மையை அதிகரிக்க பெரிதும் உதவும்.

இவ் ஆணைக்குழு NVQ மட்டம் 5/6 இற்கு மேப்பிங் (Mapping) டிப்ளோமா/உயர் டிப்ளோமா பாடநெறிகள் தொடர்பான NVQ இற்கு சமமான சான்றிதழ்கள் மற்றும் சமமான சான்றிதழ்களுக்கான சரிபார்ப்புப் கடிதங்கள் வழங்குதல் இவ் ACVS இன் தனித்துவமான செயல்பாடாகும். அதற்கமை, மேப்பிங் செய்யப்பட்ட பாடநெறிகளை வெற்றிகரமாக முடிக்கும் மாணவர்கள் இணையவழி முறையின் மூலம் சமமான சான்றிதழ்களைப் பெறுவதற்கும் உறுதிப்படுத்தல் கடிதங்களைப் பெறுவதற்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் இந்த NVQ தானியங்கு சான்றிதழ் சரிபார்ப்பு முறைமையை அறிமுகப்படுத்துவது முழு தொழிற்கல்வித் துறைக்கும் பயனளிப்பதுடன் மேற்குறிப்பிடப்பட்ட செயல்முறைகள் NVQ தகுதி முறைமையி செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை மென்மேலும் மேம்படுத்தும்.







**டாக்டர் தில்ருக்ஷி ஹெராத்** - உதவி இயக்குனர்- தேசிய திறன்கள் தரநிலைகள், பாடத்திட்டம் மற்றும் தேசிய தொழில் தகுதிகள் பிரிவு




உமது அனைத்து திறன்கள்/தகைமைகள் மற்றும் அனுபவங்களை ஸ்மார்ட் அட்டை (Smart Card) ஒன்றின் மூலம் உறுதிசெய்தல் திறன்கள் அனுமதிப்பத்திரம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. உங்களது NVQ சான்றிதழ், சேவை அனுபவம் தொடர்பான தகவல்கள் ஆகியவற்றினை www.nsp.gov.lk என்ற இணையத்தளத்தின் மூலம் அல்லது 011 7808067 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் அழைத்து அவசியமான முறையில் சமர்ப்பித்துத் திறன்கள் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும். இது தொடர்பாகக் கணிப்பீட்டினை மேற்கொண்ட திறன்களுடன் உரிய துறையில் ஒரு வருட காலத்திற்கு சேவையில் ஈடுபட்டிருத்தல் அவசியமாகும் என்பதுடன் ரூபா 1,000.00 இனைச் செலுத்துதலும் அவசியமாகும். முன்னைய அனுபவங்களை அங்கீகரித்தல் (Recognition of Prior Learning -RPL) முறையின் மூலம் NVQ சான்றிதழினைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு NVQ சான்றிதழினைப் பெற்றுக்கொண்டதும் திறன்கள் அனுமதிப்பத்திரம் (Skills Passport) தொடர்பாக விண்ணப்பிக்கமுடியும்.

## விண்ணப்ப செயல்முறை பின்வருமாறு


**01**

www.nsp.gov.lk இணைய தளத்திற்கு பிரவேசிக்கவும்...





**02**

Applicant Login ஐ க்ளிக் செய்யவும்.




## 03

Create User Account ஐ க்ளிக் செய்யவும்.




## 04

விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட விபரங்களை வழங்கி “Send” பட்டனை க்ளிக் செய்யவும்




## 05

உங்களின் செல்லிடைப் பேசிக்கு அனுப்பப்பட்ட SMS இலுள்ள user name மற்றும் Password ஐ செலுத்தவும்.





## 06

முதலாவதாக உங்களது படத்தை பதிவேற்றவும் (JPG ,520 kb Size)


## 07

அதன் பிறகு ‘Profile Information’ ஐ க்ளிக் செய்து, பிறந்த திகதி, தற்காலிக முகவரி மற்றும் செல்லிடைப் பேசி இலக்கத்தை சரிபார்க்கவும்.





## 08

Education Qualification ஐ க்ளிக் செய்து கல்வித் தகைமைகளைச் சேர்க்கவும் (தற்போது இதில் குறிப்பிடப்படும் விபரங்கள் காட் அட்டையை Scan செய்யும்போது காட்டப்படமாட்டாது.)




## 09

உங்களிடமுள்ள ஏனைய தொழில்சார் தகுதிச் சான்றிதழ்களை ‘Professional Qualification” இன் கீழ் பதிவேற்றம் செய்யவும்.




## 10

உங்கள் சேவை அனுபவத்தை உட்செலுத்தி அதன் பிரதிகளை பதிவேற்றம் (upload) செய்யவும்.(JPG , 520 kb size) சேவைச் சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினூடாக உறுதிப்படுத்தப்பட்ட பின்பே எம்மால் உறுதி செய்யப்படும்.




## 11

Extra-Curricular Activities ஐ க்ளிக் செய்து மேலதிக தகைமைகளை சேர்க்கவும். சம்பந்தப்பட்ட பிரதிகளை பதிவேற்றம் (upload) செய்யவும்.(JPG ,520 kb size) (தற்போது இதில் குறிப்பிடப்படும் விபரங்கள் காட் அட்டையை Scan செய்யும்போது காட்டப்படமாட்டாது.)




## 12

"Referees" ஐ க்ளிக் செய்து, உங்கள் சொந்த உறவுகள் அல்லாத இருவரின் விபரங்களை சேர்க்கவும்.





## 13

Language Skills ஐ க்ளிக் செய்து மொழித்திறன் சான்றிதழ்களை சேர்க்கவும். சம்பந்தப்பட்ட பிரதிகளை பதிவேற்றம் (upload) செய்யவும்.(JPJG,520 kb size) (தற்போது இதில் குறிப்பிடப்படும் விபரங்கள் காட் அட்டையை ளுஉயெ செய்யும்போது காட்டப்படமாட்டாது.)




## 14

மேற்கூறிய அனைத்து விபரங்களையும் சரியாக சேர்த்த பிறகு Skills Passport Application ஐ க்ளிக் செய்யவும்.





## 15




விபரங்களை சரிபார்த்த பிற்கு 'I Agree" பட்டனைக் க்ளிக் செய்யவும்.

## 16



சரியான கட்டணம் செலுத்தும் முறையை தேர்ந்தெடுத்து ரூ.1000 ஐ கட்டணமாக செலுத்தவும்.

வங்கியிலோ அல்லது TVEC அலுவலகத்திற்கு வருகைதந்து கட்டணம் செலுத்தினால் உரிய ரசீது பத்திரத்தை பதிவேற்றம் (upload) செய்யவும். (JPG,520 kb size)

## 17




அதன் பிறகு"Submit"பட்டனை க்ளிக் செய்யவும்.

மேலும் தகவல்

011 760 8067

skillspassport@tvec.gov.lk



**எச். பீ. இந்திக சம்பத்** - உதவி பணிப்பாளர்
தகவல் முறைமைகள் பிரிவு

## NVQ மட்டம் 04 தொழில்களுக்கான அறிவுசார் கணிப்பீடு கணினிமயமாக்கப்பட்ட முறையில்...

அழகு துறை சார்ந்த தொழில்களுக்கான அறிவை கணிப்பிடுவதற்காக NVQ மட்டம் 4 இற்கான அறிவுசார் கணிப்பீடு 2013 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது, இந்த அறிவுசார் கணிப்பீடு 15 தொழிற்துறைகளுக்கு நடாத்தப்படுகிறது. 2021 ஆம் ஆண்டு வரையில் அறிவுசார் கணிப்பீடு ஆண்டுக்கு இரண்டு தடவைகள் நடாத்தப்பட்டதுடன் சராசரி வருடத்திற்கு சுமார் 80,000 தேர்வுநாடிகள் தோற்றினர். ஒவ்வொரு தொழிற்துறைக்கும் தகுதியைப் பெறுவதற்கான தற்போதைய கோரிக்கையுடன், இவ் அறிவுசார் 2021 ஆம் ஆண்டு முதல் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்ளடக்கும் வகையில் வருடத்திற்கு ஐந்து (05) தடவைகள் நடாத்தப்பட்டு வருகிறது. மேலும், விரைவுபடுத்தப்பட்ட சேவையின் கீழ் முந்தைய கற்றலை அங்கீகரித்தல் முறையினூடாக (RPL) NVQ சான்றிதழ்களை பெற விரும்பும் தேர்வுநாடிகளுக்கு ஒவ்வொரு வார இறுதியிலும் அறிவுசார் கணிப்பீடு நடாத்தப்படுகிறது.

இந்தத் தொழில்களுக்கான NVQ சான்றிதழ்களின் கேள்வியையைப் பூர்த்தி செய்வதற்காக, 2021 ஆம் ஆண்டில் சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் (ILO) நிதியுதவியுடன் கணினிமயமாக்கப்பட்ட முறையில் அறிவுசார் கணிப்பீட்டை நடாத்துவதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகளை எமது ஆணைக்குழு மேற்கொண்டது. இதற்கான மென்பொருள் அபிவிருத்திப் பணி i-context நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. வினா வங்கிக்கான (Question Bank) கேள்விகள் மற்றும் விடைகளைத் தயாரிக்கும் பணிகளை அந்தந்த தொழிற் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களின் பங்களிப்புடன் எமது ஆணைக்குழு நிறைவேற்றியது. இக் கணினிமயமாக்கப்பட்ட வினா வங்கியில் மும்மொழிகளிலும் சுமார் 39,000 வினாக்கள் உள்ளன.

கணினிமயமாக்கப்பட்ட வினா வங்கி திறப்பு விழாவின் படப்பிடிப்புகள் கீழே.

இதுவரை நான்கு (04) அறிவுசார் கணிப்பீட்டு பரீட்சை கணினிமயமாக்கப்பட்ட முறையைப் பயன்படுத்தி






நடாத்தப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சையை நடாத்துவதற்கு நாடளாவிய ரீதியில் உள்ள சுமார் 88 கணினி நிலையங்கள் எம்மிடம் பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளன. மேலும், இந்த தொழில்முறை அறிவை மதிப்பிடுவதற்கு முன் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள, ஒவ்வொரு தொழிற்துறைக்கும் (பாடநெறிகள்) தயாரிக்கப்பட்ட வினா வங்கியிலுருந்து 10% வினாக்கள் எமது இணையதளத்தில் சேர்க்கப்பட உள்ளன. இதன் மூலம் பயிலுநர்கள் தமது ஆரம்பகால பயிற்சியின் போது அறிவுசார் கணிப்பீட்டில் வெற்றிகரமாக தோற்றுவதற்கான வாய்ப்பை நாங்கள் வழங்கியுள்ளோம்.

கணினிமயமாக்கப்பட்ட முறையில் தொழிற்துறைகளுக்கான அறிவுசார் கணிப்பீட்டை நடாத்துவதன் மூலம், ஒவ்வொரு பயிற்சி நிறுவனத்திலும் மாணவர்களுக்கான பயிற்சி நிறைவடைந்தவுடன் அவர்கள் வெகுவிரைவாக அறிவுசார் கணிப்பீட்டிற்குத் தோற்றி NVQ சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடு விரைவுபடுத்தப்படும். மேலும், முந்தைய கற்றல் அங்கீகரிப்பு (RPL) முறையின் மூலம் NVQ சான்றிதழ்களைப் பெற விரும்பும் தேர்வுநாடிகளுக்கும் இவ்வசதி மிகவும் பயனளிக்கும்.

இந்தப் புதிய முறைகள் மூலம், மாணவர்கள் தங்களின் கற்கைகள் முடிந்தவுடன் தங்களது தொழிற்துறைக்கான அறிவுசார் கணிப்பீட்டில் தோற்றுவதற்கான வரம் கிடைப்பதுடன் விரைவாக கணிப்பீட்டு முடிவுகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.



**பிரியங்கா நாணயக்கார** - பணிப்பாளர்
கணிப்பீட்டு தர உத்தரவாதம்

## முந்தைய கற்றல் அங்கீகரிப்பு (RPL) முறையினூடாக NVQ சான்றிதழ்களை வழங்குவதற்கான வாய்ப்பு மேலும் விரிவாக்கம்

2004 ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) முறைமையுடன் தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் (TVET) துறையில் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டது. இம்முறைமையினூடாக TVET இன் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், தேர்ச்சிசார் கணிப்பீட்டை நடாத்தி அதில் தேர்ச்சியடைந்த பிறகு NVQ சான்றிதழ் விருதளிக்கப்படுகிறது. யாதேனும் ஒருவர் தொழிற்துறையில் NVQ சான்றிதழைப் பெற்றுக்கொள்ள விரும்பினால், பின்வரும் முறைகளினூடாக சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

1. மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் (CBT முறையில்) பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும் தேர்ச்சிசார் பயிற்சிப் (CBT முறையில்) பாடநெறியைப் பின்பற்றுதல்
2. தொழில் அனுபவமுள்ள தேர்வுநாடிகள் தங்களின் முந்தைய கற்றலை (RPL) நிரூபிப்பதன் மூலம் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல்
3. தொழிலில் உள்ளவர்கள் நெகிழ்வான கற்றல் முறையின் (Flexible Learning Methodology) (FLM) கீழ் பாடநெறியைப் பின்பற்றுதல்.

இலங்கையில், தொழில்முறை அறிவைப் பெறுவதற்கு பல்வேறு முறைகள் உள்ளன. அவர்களின் ஆற்றலுக்கான வேலைவாய்ப்பை வழங்குதல் என்ற கருப்பொருளுடன் முந்தைய கற்றலை அங்கீகரித்தல் (RPL) முறையினூடாக NVQ சான்றிதழ் விருதளிப்பதை அறிமுகப்படுத்தினோம். இதன் மூலம் பரம்பரை ரீதியாக அறிவைப் பெற்ற தேர்வுநாடிகள், தொழில் பயிற்சி பெற்ற தேர்வுநாடிகள், சுயதொழில் செய்பவர்கள், தொழில் முனைவோர், வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு தகுந்த தொழிற்தகைமைச் சான்றிதழைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளோம். இதுவரையில் சுமார் 199,544 தேர்ச்சிபெற்ற நபர்கள் பல்வேறு துறைகளில் RPL முறையினூடாக NVQ சான்றிதழ்களை பெற்றுள்ளனர். 2023 ஆம் ஆண்டளவில், RPL முறையினூடாக NVQ சான்றிதழ்களை வழங்குவதற்கான அனுமதி மூன்று (03) பிரதான நிறுவனங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருந்தது.

1. இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை (VTA)
2. தேசிய பயிலுநர், கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA)
3. தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம் (DTET)

எனினும் தகைமை நாடுபவர்களுக்கு மிகவும் பயனுள்ள மற்றும் விரைவான சேவையை வழங்கும் நோக்கத்துடன் சீடு முறையினூடாக தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலுக்கு NVQ சான்றிதழ்களை வழங்குவதற்காக பின்வரும் நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்த கையளிப்பு வைபவம் கீழே படத்தில்

| நிறுவனம் | மதொழிற்துறை |
|---|---|
| i.Sri Lanka Institute of Tourism and Hotel Management ( SLITHM) | Hotel and Restaurants |
| ii.National Institute of Plantation Management (NIPM) | Agriculture, Hunting and Forestry |
| iii.Sri Lanka Telecom | Transport, Storage and Communications |
| iv.National Water Supply and Drainage Board | Electricity, Gas and Water Supply |
| v.Construction Industry Development Authority (CIDA) | Construction |
| vi.Gem and Jewellery Research and Training Institute (GJRTI) | Manufacturing |

| | |
|---|---|
| vi.Gem and Jewellery Research and Training Institute (GJRTI) | Manufacturing |
| vii.Central Environmental Authority, Western Provincial (CEA) | Other Community, Social and Person-al Service Activities |
| viii.Sri Lanka Air Force | Health and Social Work |
| ix.Sri Lanka Atomic Energy Board (SLAEB) | Manufacturing |
| x.Ocean University of Sri Lanka (OCUSL) | Fishing |

இம்முயற்சியானது எமது சேவையை நாடுபவர்களுக்கு சேவைகளை மிகவும் திறமையாக வழங்க எங்களுக்கு உதவியது. எதிர்காலத்தில் மேலும் சில தெரிவு செய்யப்பட்ட அரச நிறுவனங்களுக்கு RPL முறையில் NVQ சான்றிதழ் வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தற்போது களத்தில் இருக்கும் தொழில் வல்லுநர்கள் தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி NVQ சான்றிதழ்களைப் பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.





**பிரியங்கா நாணயக்கார** - பணிப்பாளர்
கணிப்பீட்டு தர உத்தரவாதம்

# நீங்களும் கணிப்பீட்டாளர் ஆகலாம்

தேர்ச்சிசார் பயிற்சி, முந்தைய கற்றலை அங்கீகரித்தல், நெகிழ்வான கற்றல் முறை மூலம் நீங்கள் NVQ தகுதிகளைப் பெற விரும்புகிறீர்களா என்பதைப் பொருட்படுத்தாமல் உங்கள் தொழிற்துறையில் நிபுணத்துவம் பெற்ற இரண்டு கணிப்பீட்டாளர்களாலேயே உங்களது தேர்ச்சி மட்டம் கணிப்பிடப்படும். அவர்கள் உங்களினது தொழிற்துறை தொடர்பான அறிவுஇ திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை கணிப்பிடுகிறார்கள். நீங்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்களா என்பதை எமது ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள கணிப்பீட்டாளர்களால் உறுதிப்படுத்தப்படுகிறது. தற்போது எங்களின் கணிப்பீட்டாளர் பதிவுக்களரியில் 98 தொழில்கள் மற்றும் 95 துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சுமார் 4200 கணிப்பீட்டாளர்கள் செயலளவில் உள்ளனர். உங்களின் தொழில் அனுபவத்தையும் அறிவையும் பயன்படுத்தி இந்த கௌரவமான சேவையை வழங்குவதற்கான வாய்ப்பை ஆணைக்குழு உங்களுக்கு வழங்கியுள்ளது. அதற்காக நீங்கள் செய்ய வேண்டியதுஇ



எங்கள் நிறுவனத்தின் இணையதளமான www.tvec@gov.lk இல் உள்நுழைந்து நிகழ்நிலை (Online) படிவத்தை (புதிய கணிப்பீட்டாளர் விண்ணப்பம்) பூர்த்தி செய்யவும்.

இந்த வழியில், உங்களுக்கு அனுப்பப்படும் ஆன்லைன் விண்ணப்ப படிவத்தின் படி நீங்கள் நேர்காணல் குழுவிற்கு பரிந்துரைக்கப்படுவீர்கள். உங்கள் தொழில் தொடர்பான அறிவை உறுதிசெய்த பிறகு, கணிப்பீட்டு செயல்முறை தொடர்பான ஐந்து (05) நாள் பயிற்சியை வழங்கிய பிறகு நீங்கள் கணிப்பீட்டாளராக பதிவு செய்யப்படுவீர்கள்.

இதன் மூலம் நாடெங்கும் பரந்து விரிந்து கிடக்கும் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட அரச மற்றும் தனியார் துறை பயிற்சி நிறுவனங்களில் கற்கும் மாணவர்களை கணிப்பீடு செய்வதற்கான வாய்ப்பு உங்களுக்கு கிடைக்கும்.

எனவே, இன்றே எமது ஆணைக்குழுவின் கணிப்பீட்டாளராக உங்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள்.



**பிரியங்கா நாணயக்கார** - பணிப்பாளர்
கணிப்பீட்டு தர உத்தரவாதம்

# රැකියා නැත්තේම නෑ

මිනිසත් බව ලබා ඉපදී මියෙන    තුරා
යම් මෙහෙවරක් කළයුතු වෙයි වෙහෙස    දරා
කළ සේවය බලයි සමහර කෙනෙකු    කිරා
ඒ ගැන සතුටු විය හැක දිවි තිබෙන    තුරා

බුද්ධිය මෙහෙයවා ඔබ බැලුවත්    දසත
රැකියා තිබේ කෙනෙකුත් ඔබ වෙත    මවිත
කරුණක් මතක් කර දෙමින් මේ ලෙස    නැවත
ලොව එක් කෙනෙකු එක් දෙයකට වෙයි    සමත

හැකියා ඔබේ තේරුම් ගෙන නිර    තුරුව
වෘත්තීය පුහුණුවෙන් ගෙන දෙයි පෙර    හුරුව
දිවිමග සරන්නට ඔබ පැතූ ලෙස    සරුව
පෑදේ පොටක් නෙත් ඉදිරියේ පිය    කරුව

සැගවී තිබෙන හැකියාවන් හදුන    ගෙන
පෙර මග බලන අය හට  අත් වැලක්    වෙන
ඇත නෙක පාඨමාලා ඔබට අත    දෙන
විමසා ලන්න ආයතනයට එනු    මැන








நிசன்சலா தில்ருக்ஷி விஜேசேகர
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு அலுவலர்(வேலை கவர்)
கணக்கு பிரிவு


## எழுத்தாளர் குழாம்


**திரு. ஜீ.ஏ.எம்.யூ. கனேபொல அவர்கள்** - பணிப்பாளர்
தகவல் முறைமைகள் பிரிவு

**திரு. மஞ்சுள விதானபத்திரண அவர்கள்** - பதில் பணிப்பாளர்
தொழிற்துறைசார் உறவுகள் பிரிவு

**திருமதி. பீ.பீ.பீ. நாணயக்கார அவர்கள்** - பதில் பணிப்பாளர்
தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு

**திரு. அனுர விரக்கோன் அவர்கள்** - பிரதி பணிப்பாளர்
தகவல் முறைமைகள் பிரிவு

**திருமதி. தமயந்தி விக்கிரமசிங்க அவர்கள்** - பிரதி பணிப்பாளர்
தேசிய தொழிற்தகைமைகள் பிரிவு

**திரு. எச். பீ. இந்திக சம்பத் அவர்கள்** - உதவி பணிப்பாளர் (பதில்)
தகவல் முறைமைகள் பிரிவு

**திரு. சமன் விக்கிரமசிங்க அவர்கள்** - உதவி பணிப்பாளர்
தகவல் முறைமைகள் பிரிவு

**திரு. நதீஷ் த சில்வா அவர்கள்** - உதவி பணிப்பாளர்
தகவல் முறைமைகள் பிரிவு

**திரு. பிரியந்த தர்மசேன அவர்கள்** - உதவி பணிப்பாளர்
திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு

**திருமதி அனுஷா த சில்வா அவர்கள்** - உதவி பணிப்பாளர்
தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு

**செல்வி. பாஷினி விதானகே அவர்கள்** - உதவி பணிப்பாளர்
தேசிய தொழிற்தகைமைகள் பிரிவு

**திருமதி.உபேக்ஷா விஜேபண்டார அவர்கள்** - உதவி பணிப்பாளர்
தேசிய தொழிற்தகைமைகள் பிரிவு

**கணனி வரைகலை வடிவமைப்பு மற்றும் பக்கங்கள் தயாரிப்பு**
- **விமர்ஷி ரம்மாவடு** - வளர்ச்சி அலுவலர்(வேலை கவர்)
- **வெத்துளி நதின்சா** - பயிற்சி